செ.வெ.எண்: 35 நாள்: 10.07.2025

**திருக்கோவிலூர் நகராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம் 11 இடங்களில் நடைபெற உள்ளது.**

**திருக்கோவிலூர் நகராட்சியில் சுமார் 3413 எண்ணிக்கையில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடுகள் வீடு வீடாக வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இஆப, அவர்கள் தகவல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்றப் பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். அதனைத் தொடர்ந்து 15.07.2025 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

இதன்படி திருக்கோவிலூர் நகராட்சியில் 11 முகாம்கள் நடைபெற உள்ளது. இதில் 17.07.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 1,2,3-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு திருக்கோவிலூர் பிடாரி அம்மன் கோயில் தெரு ஸ்ரீ சுப்ரமணிய மஹாலில் நடைபெறுவதுடன், “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம் திட்டத் தொடக்க விழாவும் நடைபெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து 23.07.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 5,6,14-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு திருக்கோவிலூர் செவலைரோடு, பழைய நகராட்சி அலுவலகக் கட்டிடத்திலும், 06.08.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 4,15,16-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு கடலூர் மெயின் ரோடு ராஜேஸ்வரி திருமண மண்டபத்திலும், 12.08.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 7,8-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு திருக்கோவிலூர் காரி பாரி திருமண மண்டபத்திலும், 20.08.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 9,10,11-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு திருக்கோவிலூர் மார்கெட் தெரு ராதா திருமண மண்டபத்திலும், 28.08.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 12,13-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு திருக்கோவிலூர் செவலைரோடு பழைய நகராட்சி அலுவலகக் கட்டிடத்திலும் “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இதேபோன்று 03.09.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 17,18-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு திருக்கோவிலூர் மார்கெட் தெரு ஜெயின் மஹாலிலும், 09.09.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 19,20,21-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு சந்தப்பேட்டை மீர் மஹாலிலும், 17.09.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு 22,23க்கு உட்பட்ட பகுதிகளுக்கு சந்தப்பேட்டை ஆண்டவர் மஹாலிலும், 24.09.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 24.25-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு சந்தப்பேட்டை

ஆசனூர் ரோடு ஜெய விஜய மஹாலிலும், 30.09.2025 அன்று திருக்கோவிலூர் நகராட்சி வார்டு எண் 26,27-க்கு உட்பட்ட பகுதிகளுக்கு சந்தப்பேட்டை ஆசனூர்ரோடு எம்.ஜெ மஹாலிலும் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

மேலும் திருக்கோவிலூர் நகராட்சியில் 27 வார்டுகள் உள்ளது. இதில் உள்ள 8,346 குடியிருப்புகளுக்கு 4 தன்னார்வலர்கள் மூலம் சுமார் 3,413 எண்ணிக்கையில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடுகள் வீடு வீடாக வழங்கும் பணிகள் தொடர்ந்து முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

எனவே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற உள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.பிரசாந்த்,இஆப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.